O.S. No.235/2018

Date: 01.09.2025

பி.வா.சா.2, ரூபன்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

பிரதிவாதிக்கு அரசாங்கத்தால் 25 வருடங்களுக்கு முன்பாக வழங்கப்பட்டது. வாதிக்கு எந்த ஆண்டு எவ்வளவு தொகைக்கு கிரயம் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதி கிரயம் பெற்ற ஆண்டு முதல் தகர செட் போட்டு வந்து குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல, பிரதிவாதி தான் குடியிருந்து வருகிறார். வாதி கிரயம் பெற்ற ஆண்டு முதல் தகர செட் போட்டு வந்து குடியிருந்து வருகிறார் என்பது தான் உண்மை என்றால் சரியல்ல. பிரதிவாதி உடன் பிறந்த சகோதரி அன்னமுத்து என்பவருக்கும் நிலம் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. காளிசாத்தான் கிராமத்திற்கு எந்த ஆண்டு எத்தனை வீடுகள் அரசால் வழங்கப்பட்டது என்றால் 2000 ம்ஆண்டு 67 வீடுகள் வழங்கப்பட்டது. தபசு சொத்துக்குரிய சர்வே எண் பட்டா தெரியுமா என்றால் தனித் தனி சர்வே எண் உள்ளதால் எனக்கு தெரியாது. தபசு சொத்துக்குரிய மால்கள் வடக்கு பக்கம் ஜானகி காலிமனை தென்புறம் நடைபாதை, மேல்புறமும் நடைபாதை உள்ளது. பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தார்கள் அனைவரும் கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவர்கள் என்றால் இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறியுள்ளார்கள் எந்த ஆண்டு என்று எனக்கு தெரியாது. அரசாங்கத்தால் பிரதிவாதி இருக்கும் காலிமனையில் ஏன் வீடு கட்டிகொடுக்கவில்லை என்று எனக்கு தெரியாது. 10 ஆண்டுகளுக்கு முன்பு வாதிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த ஆவணத்தை எந்த ஆண்டு ரத்து செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதி விசாரணையில் வாதி தான் கிரயம் பெற்ற

ஆண்டு முதல் தகர செட் போட்டு வந்து குடியிருந்து வருகிறார் என்றும், மின் இணைப்பு வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. வாதிக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த ரத்து ஆவணம் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணம் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. பிரதிவாதி எத்தனை ஆண்டுகளாக தீர்வு வரி செலுத்தி வருகிறார் என்றால் 10 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து செலுத்தி வருகிறார். தபசு சொத்து அரசாங்கத்தால் 1996 ம் ஆண்டு முதல் வீடு இல்லாதவர்களுக்காக வழங்கப்பட்ட சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி மற்றும் 15 நபர்களுக்கு வழங்கப்பட்ட பட்டாக்கள் ரத்து செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிதரப்பு தாக்கல் செய்துள்ள தீர்வை ரசீதில் கட்டிடத்தின் தன்மை பகுதியில் கான்கீரிட் வீடும் என போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி பெயரில் எந்த ஆண்டு மின் இணைப்பு பெறப்பட்டது என்றால் 4 வருடங்கள் இருக்கும். பிரதிவாதி வாதிக்கு 2 1/2 செண்டு இடம் எழுதிக் கொடுத்தார். சாட்சி அளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வரவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி அழைத்ததன் பெயரில் தான் வந்துள்ளேன். பிரதிவாதி வாதியிடம் பெற்ற கிரய தொகையை எந்த ஆண்டு எங்கு வைத்து திருப்பி கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.